# இளையோர் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகளை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

**கனிமொழி, க.**

kanimoly8@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் -** சமகால சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சனைகளுள் தீவிரமான ஒன்றாக இளையோர் மத்தியிலான விலகல் நடத்தை காணப்படுகின்றது. இளையோர் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்ற ஆய்வானது யாழ்ப்பாணம் சிறைச்சாலையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இதன் பிரதான நோக்கம் இளைஞர்களின் விலகல் நடத்தைக்கும் நியமமறுநிலைக்கும் இடையிலான தொடர்பினைக் கண்டறிதல் ஆகும்.இவ் ஆய்வானது யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகளில் 18-30 வயதுப்பிரிவினரை மையமாகக் கொண்டு நோக்கங்கருதிய வகையில் 50 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்ற ஆய்வில் அளவு சார் ஆய்வு முறைகளையும் பண்பு சார் ஆய்வு முறைகளையும் பிரயோகித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடய ஆய்வுஇ நேர்காணல்இ அவதானம்,வினாக்கொத்துஇ முதலான தரவு சேகரிப்பு நுட்பங்களையும் ஒன்றிணைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது விபரண ஆய்வாக அமைந்துள்ளது. இவ்வாய்வானது இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தைகளையும், விலகல் நடத்தைக்கான காரணங்களையும் கண்டறிந்துள்ளது. பிரதானமான விலகல் நடத்தையாக களவுஎடுத்தல் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் பாலியல் வல்லுறவு, நிதிமோசடி, கொலை, போதைவஸ்து பாவனை, போதைப்பொருள் விற்பனை,போதைவஸ்து கடத்துதல், கப்பங்கோருதல், சண்டை, குழுமுரண்பாடு ஆகிய விலகல் நடத்தைகளும் இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் விலகல் நடத்தைக்கான காரணங்களாக சமூகம், குடும்பசூழ்நிலை, வறுமை, நண்பர்கள், சுயவிருப்பம், காதல், போதைப்பொருட்பாவனை, தொழில் ரீதியான அழுத்தம் என்பன கண்டறியப்பட்டுள்ளன. சமூகத்தில் இளைஞர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை, சமூகத்தின் கட்டுப்பாடுகள் அதிகரித்தமை, தனிப்பட்ட விருப்பம், சமூகம் இளைஞர்கள் மீது ஆரோக்கியமான செல்வாக்கினை பிரயோகிக்கத் தவறியமை என்ற நியமமறுநிலைக்கான காரணங்களால் இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தைகள் இடம்பெற்றுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது. விலகல் நடத்தையைக் குறைப்பதற்காக கல்வியை வழங்குதல்,வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் உருவாகுதல், பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், உளவள ஆற்றுப்படுத்தல், ஆன்மீக ஽ீதியான வழிப்படுத்தல், இளைஞர்அமைப்புக்கள் (கழகங்கள் உருவாகுதல்) விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல், சமூகமட்ட நிறுவனங்கள் ஆதரவினை வழங்குதல், மக்களின் மனங்களில் மாற்றத்தினை ஏற்படுத்துதல், இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும் போன்ற சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமே இளைஞர்களை சமூகச் செயற்திறனாளிகளாக மாற்ற முடியும்.

**திறவுச்சொற்கள் :** இளைஞர்கள்இநியமமறுநிலைஇ விலகல் நடத்தைகள்

## I. ஆய்வு அறிமுகம்

இன்று உலகம் முழுவதும் மனிதவாழ்வின் போக்கினை மாற்றி அமைத்துவரும் சமூக சவால்கள் தொடர்பில் பெருமளவுஅக்கறைசெலுத்தப்படுகின்றது.இன்றைய நவீன சமூகங்களில் நியமமறுநிலை வளர்ந்துவரும் சமூகவிவகாரமாக உள்ளது. சமூகவிதிகளை ஏற்றுக்கொண்டுசமூகத்தில் ஒன்றிப்போன சமூகமரபுகள்இ பாரம்பரியங்கள் ஆகியவற்றைபின்பற்றும் வழமையானபோக்குஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றது. ஆயினும் இவற்றுக்கு எதிரான முறையில் நடப்போரும் சமூகத்தில் காணப்படுகின்றனர்.அவ்வாறான வேறுபட்ட நடத்தை நியமமறுநிலை என விசேடமாக விபரிக்கப்படுகின்றது [2].

ஒரு சமூகத்தின் நீதியான வாழ்விற்கு அடித்தளமாக சமயங்கள், சட்டங்கள், ஒழுக்கப் போதனைகள், அறநெறிக்கருத்துக்கள் என்பனவிளங்குகின்றன. இத்துறைகளில் காட்டுகின்ற ஒழுக்க விழுமிய மீறுதல் சார்ந்த ஒரு நடவடிக்கையாக விலகல் நடத்தை என்பது சமூகவியல் பரப்பில் இனங்காணப்படுகின்றது [2].

இளைஞர்களின் விலகல் நடத்தையானது தனிமனிதப்பிரச்சனை அல்ல. மாறாக சூழ்நிலையில் நிலவுகின்ற பல்வேறு காரணிகள் ஒருங்கிணைந்து தனியனை சமுகத்திற்குஎதிரானசெயல்களில் ஈடுபடவைக்கும் பிரச்சினையாகும். ஒரு சமூகத்தின் கவனிக்கத்தக்க மாற்றீடற்ற பிரிவினராகஅமையும் வயதுப்பிரிவினர் என்றவகையில் இளையோரை சமூகவலுப்படுத்தல்என்ற இலக்கினைஅடையசவாலாக அமைவது இளையோரின் விலகல் நடத்தைகள் ஆகும்[3].

ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கையின் படி இளையோர் என்போர் 15-24 வயதுக்கு உட்பட்டவராககாணப்படுகின்றனர். அத்துடன் UNESCO அறிக்கையின் படி 15-35 வயதுக்கு உட்பட்டோர் இளையோர் எனவரையறுக்கப்பட்டுள்ளனர். World Office of Juvenile Justice and Delinquency Prevention Statistical Briefing Book 2014ன் படி உலகளாவியரீதியில் 1985-2013 காலப்பகுதியில் 40 மில்லியனிற்கும் அதிகமான இளையோர் விலகல் நடத்தையினர் இனங்கப்பட்டுள்ளனர்.ஐக்கிய அமெரிக்காவில் 2013ம் ஆண்டில் 53000 பேர் குற்றநடத்தைகளுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் Department of Probation and Child Care Service Sri Lanka Statistical Report 2010ன் அடிப்படையில் 1182 இளைஞர்கள் குற்றப்பதிவுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 2015ம் ஆண்டு கையேட்டின் படி 3345 பேர் குற்றப்பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் 264 பேர் தண்டனை பெற்ற குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். தற்போது குற்றநடத்தை காரணமாக 380 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 54 பேர் இளையோராகக் காணப்படுகின்றனர் (யாழ்பாணம் சிறைச்சாலை கையேடு-2016).

சமூகமயமாக்கலிலான பிரச்சினைகள், சமூக பொருளாதார நிலை இவறுமை, சுயபண்பாடு பற்றிய அக்கறையின்மை, குடும்பவன் முறைஎன்பனவிலகல் நடத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் போதைப்பொருள் பாவனை, பாலியல் வன்முறைகள், குடும்ப உடைவுகள், கொலை, போதைப் பொருட்கடத்தல், குழு முரண்பாடுகள் ஆகிய சமூகவிலகல் நடத்தைகள் ஏற்படுகின்றன. சமூகவிலகல் நடத்தை காரணமாக சமூகப்புறமொதுக்கல், சமூக அந்தஸ்தினை இழத்தல, குடும்பத்திலிருந்து வெளியேற்றப்படுதல், மனச்சோர்வு, வறுமை ஆகியபிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்றஆய்வானது விலகல் நடத்தைக்கானகாரணத்தினை இனங்காண்பதற்கும் அக்காரணிகளை வெற்றிகொள்வதற்கு உரிய வழிவகையைக் கண்டறியவும் சாத்தியமாக அமையும். இளைஞர்கள் சமூகவாழ்வின் எல்லாநிலையிலும் பங்கேற்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள உதவிபுரிவதாக அமையும்.

## II. இலக்கிய மீளாய்வு

Wairimu (2013) என்பவரின ˙"Perceived factors influencing deviant behavior among the youth in Nijanthaini community ,Nairobi, Kenya" என்ற ஆய்வு இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தைக்கான காரணங்களைக் கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டு முநலெயவின் Nijathaini சேரிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் ஆய்வில் குற்ற நடத்தை, வறுமை, குழுநடத்தை, இளையோர் என்ற எண்ணக்கருக்களும் தொழிற்பாட்டுக் கோட்பாடு (The theory of Action),Ra ஒழுங்கமைவுக்கோட்பாடு (The self regulatory theory) ஆகியகோட்பாடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுப்பகுப்பாய்வானது விபரண ரீதியாகவும் அனுமானப்புள்ளி விபரவியல் ரீதியாகவும் அளவு சார்ந்த பண்பு சார்ந்த வகையில் அமைந்துள்ளது. ஆய்வில் போதைப்பொருள் பாவனை, திருமணத்திற்கு முன்னரான பாலியல் தொடர்புகள் இமதுபாவனை என்ற வடிவிலான விலகல் நடத்தைகள், குழுச்சண்டைகள், களவு,˙விபச்சாரம், திருட்டு ஆகிய விலகல் நடத்தைகள் இனங்காணப்பட்டுள்ளன. 65% பெண்களும் 35% ஆண்களும் விலகல் நடத்தையில் ஈடுபட்டுள்ளனர். அதிக விலகல் நடத்தையாக(92%) போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. விலகல் நடத்தையில் சமூக உளவியல் காரணிகளே செல்வாக்குச் செலுத்துகின்றன என்ற கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

Senaratna and Wijewardana (2012) என்பவர்களின் "Risk behaviour of street children- Colombo" என்ற ஆய்வானது வீதீயோரச் சிறுவர்கள் மத்தியிலான இடர் நடத்தைகளை விபரித்தல் மற்றும் அந்நடத்தையை தீர்மானிக்கும் காரணிகளை அறியும் நோக்கில் இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வில் வயது, இனம், மதம், கல்வி நிலை, யாருடன் வசித்தல, வசிக்கும் முறை என்ற மாறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக பெருமளவான வீதியோரச் சிறுவர்கள் 14 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். 18% தனிமையில் வாழ்கின்றனர். இவர்களிடம் களவு, சிறுவர் வேலைக்குச் செல்லல், மதுபாவனை, போதைப் பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனை, கொள்ளை, பாலியல் தொழில், புகைத்தல் ஆகிய விலகல் நடத்தைகள் இடம்பெறுவதாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் விழிப்புணர்வினை அதிகரித்தல் மற்றும் அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான தந்திரோபாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்ற ஆய்வுடன் ஒத்து செல்வதாக உள்ளது. குறிப்பாக விலகல் நடத்தைக்கான காரணத்தினை கண்டறிதல்இ ஆய்வுமுறையியல்களை வடிவமைத்தல் என்பவற்றில் Risk behaviour of street children என்ற ஆய்வுடன் பொருத்தமானதாக அமைகின்றது.

இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்ற இக்குறிப்பிட்ட

ஆய்வில்நியமமறுநிலை என்பது ஒரு அசாதாரண சூழ்நிலையாகும். டுர்க்கைம் நியமமறுநிலைக்கான காரணங்களாக சமூகம் அங்கத்தவர்கள் மீது ஆரோக்கியமான செல்வாக்கைப் பிரயோகிக்கத் தவறுவதனாலேயே நியமமறுநிலை தோன்றுகின்றது. இக்கட்டத்தில் சமூக அழுத்தங்கள் நேர்மறையாக பிரயோகிப்பதற்கு பதில் எதிர்மறையாகவே பிரயோகிக்கப்படுகின்றன. இதனால் சமூகத்தால் தனிமைப்படுத்தப்பட்டு சாதாரண வேளைகளில் பின்பற்றுவதற்கு அஞ்சும் நடத்தைகளை விரக்தியுற்ற வேளையில் பின்பற்ற ஆரம்பிப்பான்.

இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்ற இக்குறிப்பிட்ட ஆய்வில் விலகல் நடத்தை என்பது இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கள், இயல்புகள் என்பன சமூக எதிர்பார்ப்புக்கள், நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றிலிருந்து எதிரான வகையில் அமைகின்ற போது அவை சமூக விலகல்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இவை சமூகச் சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபட்டு அமைகின்றன.

“இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும்” என்ற ஆய்வில் ஆய்வின் நோக்கங் கருதி 18-30 வயதுக்கு உட்பட்டோர் இளைஞர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள விலகல் நடத்தையாளர்களின் எண்ணிக்கை, வயதுப்பிரிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இளைஞர்கள் வரையறுக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட ஆய்வானது இளையோர் மத்தியிலான விலகல் நடத்தைகளுக்கான காரணிகள், விலகலின் போக்குகள், விலகலைக் குறைக்கும் வழிகள் என்பவற்றை ஆய்வு செய்வதற்கு இவ்வாய்விற்கு உதவுவதாக அமைகின்றது.

**ii. ஆய்வு நோக்கம்**

ஆய்வின்பிரதான நோக்கமாக இளைஞர்களின் விலகல் நடத்தைக்கும் நியமமறுநிலைக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிதல் அமைந்துள்ளதுடன் உப நோக்கங்களாக இளைஞர்கள் மத்தியில் விலகல் நடத்தையைத் தூண்டும் காரணிகளைக் கண்டறிதல் இவிலகல் நடத்தைதையின் வடிவங்களை அறிதல் என்பன அமைந்துள்ளன.

**iv. ஆய்வு முறையியல்**

**4.1. ஆய்வு வடிவமைப்பு**

இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தையும் நியமமறுநிலையும் என்றஆய்வில் அளவுசார்/ கணியம்சார் ஆய்வு முறைகளையும் பண்புசார் ஆய்வு முறைகளையும் பிரயோகித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது விபரண ஆய்வாக அமைந்துள்ளது.

**4.2. தரவுசேகரிப்பு முறைகளும்மாதிரித்தெரிவும்**

இவ் ஆய்வின் தரவுசேகரிப்பு முறைகளாகமுதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத்தரவுகளாக இவினாக்கொத்து இவிடய ஆய்வு, பிரதான தகவல் வழங்குனருடனான நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளின் கட்டுரைகள், இணையதளக் கட்டுரைகள், சிறைச்சாலைப் புள்ளிவிபர அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்பட்டள்ளன.


இவ் ஆய்வில நோக்கங்கருதியமாதிரி எடுப்புமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி 15-24 வயதிற்கு உட்படடோர் இளையோர் என வரையறுக்கப்பட்டள்ளது. (UN world youth report-2005-2015)ஆய்வின் நோக்கம் கருதி 18-30 வயதுக்கு உட்பட்டோர் இளையோர் என வரையறுக்கப்பட்டள்ளனர். ஏனெனில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள விலகல் நடத்தையாளர்களின் எண்ணிக்கை. வயதுப்பிரிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இளையோர் வரையறுக்கப்பட்டள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 2016ம் ஆண்டு ஏப்ரல் வரையான அறிக்கையின் படி, தண்டனைக் கைதிகள் 142 பேர் காணப்படுகின்றனர் (யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 2016ம் ஆண்டு ஏப்ரல்கையேடு). இவர்களில் 54 பேர் 18-30 வயதுப்பிரிவினராகக் காணப்படுகின்றனர். இவர்களில் உளநலத்தினைஅடிப்படையாகக் கொண்டு நோக்கங்கருதியவகையில் 50 விலகல் நடத்தையாளர்கள்ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (சிறைச்சாலைக்கையேடு-2016 ஏப்ரல்).

**V.தரவுகளும் தரவுப்பகுப்பாய்வும்**

**5.1.விலகல் நடத்தையாளர்களும் சமூக குடித்தொகை விபரமும்**

**5.1.1விலகல் நடத்தையாளர்களின் வயது தொடர்பான விபரம்.**

**வரைபடம்-01**





மூலம்: களஆய்வு

வயது அடிப்படையில் விலகல் நடத்தையாளர்களை நோக்கும் போது 18-20 வயதுப்பிரிவினர் 36 வீதமாகவும், 21-23 வயதினை உடையவர்கள் 4 வீதமாகவும், 24-26 வயதினை உடையவர்கள் 8 வீதமாகவும், 27-29 வயதினை உடையோர் 20% வீதமாகவும், 30 வயதினை உடையோர் 32% வீதமாகவும் காணப்படுகின்றனர். இவர்களில் அதிகளவு விலகல் நடத்தையினை மேற்கொள்ளும் வயதுப் பிரிவினராக 18-20 வயதுப்பிரிவு காணப்படுகின்றது.

**5.1.2 விலகல் நடத்தையாளாகளின் பால்நிலை தொடர்பான விபரம்**

**வரைபடம்-02**




மூலம்: களஆய்வு

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள விலகல் நடத்தையாளர்களை பால்நிலை அடிப்படையில் நோக்குகின்றபோது 92 வீதத்தினர் ஆண்களாகவும், 8 வீதத்தினர் பெண்களாகவும் காணப்படுகின்றனர். சமூகத்தில் நிலவுகின்ற ஆண், பெண் தொழிற்பாடுகளினை /வகிபங்கினை அடிப்படையாகக் கொண்டு ஆண்கள் வருமானத்தினை ஈட்ட வேண்டிய தேவையினை பூர்த்தி செய்வதற்காக விலகல் நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆண்களிடமிருந்தே கூடுதலான தகவல்கள் ஆய்விற்காக பெறப்பட்டுள்ளது.

**5.1.3 விலகல் நடத்தையாளர்களும் தொழிலும்.**

**அட்டவணை 01**

| இல | தொழில் செய்தல் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1 | ஆம் | 34 | 68% |
| 2 | இல்லை | 16 | 32% |

| இல | தொழில் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1 | விவசாயம் | 2 | 5% |
| 2 | தனியார் துறை | 7 | 20% |
| 3 | அரச துறை | 1 | 2% |
| 4 | சுய தொழில் | 24 | 73% |

| இல | குடும்ப.வருமானம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1 | 5000> | 6 | 18% |
| 2 | 5001 - 10000 | 2 | 6% |
| 3 | 10001 -15000 | 8 | 23% |
| 4 | 15001 - 20000 | 10 | 30% |
| 5 | 20000 < | 8 | 23% |

மூலம்: களஆய்வு

அட்டவணை 01 இன் படி 68% மான விலகல் நடத்தையாளர்கள் தொழில் செய்பவர்களாகவும் 32% ஆனவர்கள் தொழில் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களில் அட்டவணை 19 இன் படி 5% ஆனோர் விவசாயத்தினை மேற்கொள்வோராகவும் 20% ஆனோர் தனியார்துறையில் பணி புரிபவர்களாகவும் 2% ஆனவர்கள் அரசதுறையில் பணிபுரிபவர்களாகவும் 73% ஆனவர்கள் சுயதொழில் புரிபவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆய்வில் பங்கேற்றோரில் அதிகளவானோர் (73%) கூலி, கடற்தொழில், மேசன்வேலை, வியாபாரம், தச்சுத்தொழில். கல் உடைத்தல் என்பவற்றை மேற்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அட்டவணை 01, இன் அடிப்படையில் 18%தினர் 5000ற்கு குறைவான வருமானத்தினைப் பெறுவோராகவும், 6% ஆனவர்கள் 50001-10000 ரூபா வருமானம் பெறுவோராகவும், 28% ஆனவர்கள் 10001-15000 வருமானம் பெறுவோராகவும், 30வீதமானோர் 10001-20000 வரை வருமானம் பெறுவோராகவும், 23% ஆனோர் 20001ற்கு அதிகமான வருமானத்தினைப் பெறுவோராகவும் காணப்படுகின்றனர். 10000 ரூபாவிற்கு குறைவாக வருமானம் பெறுவோர் 24% ஆக காணப்படுகின்றனர்.

'நான் கல்லுடைத்தல் தொழில் செய்து வருகின்றேன். எனக்கு தொழில் மூலமாக கிடைக்கின்ற வருமானம் போதாமை காரணமாக கஞ்சா விற்பனையைச் செய்து வந்தேன்'(விடய ஆய்வு 01) என்பதில் விலகல் நடத்தையாளரின் வருமானநிலை தெளிவாகிறது. இருப்பினும் 80% ஆனவர்கள் 15001-20000 வரை வருமானம் பெறுவோராகக் காணப்படுகின்றனர். டுர்க்கைம் என்பவரின் சமூக அங்கத்தவர்களின் நியாய பூர்வமான தேவைகளைச் சமூகம் பூர்த்தி செய்யத் தவறுவதாலேயே நியமமறுநிலை உருவாகின்றது என்ற கருத்தானது பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் வருமானத்தின் மூலம் தேவைகள் நிறைவேற்றப்பட முடியாததாக காணப்படுகின்றது இதனால் விலகல் நடத்தைகள் ஏற்பட்டன. இங்கு அனோமிக் கோட்பாட்டின் படி தேவைகள் நிறைவேற்றப்படாமை என்பது முக்கியமான விடயமாக காணப்படுகிறது.

5.2.விலகல் நடத்தையாளர்களும் சிறைச்சாலைக்கு வந்தமைக்கான காரணங்களும்

அட்டவணை 02

| இல | காரணம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1 | களவு | 18 | 36% |
| 2 | கொலை | 3 | 6% |
| 3 | பாலியல் வல்லுறவு | 3 | 6% |
| 4 | சமூக விரோத நடவடிக்கைகள் | 6 | 12% |
| 5 | போதை வஸ்து பாவனை | 2 | 4% |
| 6 | போதை வஸ்து விற்பனை | 6 | 12% |
| 7 | கடத்தல் | 1 | 2% |
| 8 | கப்பங்கோரல் | 1 | 2% |
| 9 | சண்டை | 8 | 16% |
| 10 | நிதி மோசடி | 1 | 2% |
| 11 | சட்டவிரோத திருமணம் | 1 | 2% |
| | | 50 | 100% |

(மூலம் : களஆய்வு)

ஆய்வில் பங்கேற்றோரில் (36%) பெரும்பாண்மையானோர் களவு எடுத்தல் என்ற விலகல் நடத்தையை மேற்கொண்டுள்ளளனர். இவர்களில் கையடக்கத் தொலைபேசி மீள்நிரப்புகை அட்டை, தொலைபேசி, வானொலி, இலத்திரனியல் பொருட்கள், பணம், நகைகள், ஆட்டோவின் வானொலிப் பெட்டி, சைக்கிள், மாடு போன்றவற்றை களவெடுத்துள்ளார்கள் என களஆய்வு மூலம் தெளிவாகின்றது. "யாழ் சிறைச்சாலையிலுள்ள கைதிகளில் அதிகளவானோர் களவு எடுத்தல் என்ற விலகல நடத்தையையே மேற்கொண்டுள்ளனர்". (பிரதான தகவல் வழங்குனருடனான நேர்காணல்-01) என்ற கருத்தும் பகுப்பாய்வுடன் பொருந்திச் செல்வதாக அமைந்துள்ளது.

அத்துடன் Senaratna and wijewardana மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் பகுப்பாய்வுடன் பொருத்தமானதாக அமைகின்றது [5]. இங்கு அதிகளவான வீதியோரச் சிறுவர்கள் களவு என்ற விலகல் நடத்தையினை மேற்கொண்டுள்ளனர்.

6% ஆனவர்கள் பாலியல் சார்ந்த விலகல் நடத்தைகளை மேற்கொண்டுள்ளனர்.இவற்றில் பாலியல் துஸ்பிரயோகம் / பாலியல் வல்லுறவு, என்பன முக்கிய விலகல் நடத்தைகளாகக் காணப்படுகின்றன. 6% ஆனவர்கள் கொலை செய்தல் என்ற விலகல் நடத்தையினை மேறகொண்டுள்ளனர். 12% ஆன விலகல் நடத்தையாளர்கள் சமூக விரோத நடவடிக்கைகளினை மேற்கொண்டோராக காணப்படுகின்றனர். இவர்கள் குழுக்களாக வீதிகளில் நின்று முரண்படுதல், அடித்தல் என்பவற்றை மேற்கொள்பவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான இளைஞர்களில் விசேடமாக ஆண்கள் வன்முறைகளை அடிக்கடி சந்திக்கின்றனர். சமூகத்தில் குழுக்கள் சுயமான விதிமுறைகள் மற்றும் நியமங்கள் எனபவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டுக்கோப்பாக தொழிற்படுகின்றன. இவை ஏனைய குழக்களுடன் வன்முறை புரிவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. குழு முரண்பாடு பற்றிய கருத்தானது சமுதாய அனோமி என்ற கருத்துடன் பொருத்தமானதாக அமைகின்றது [2] ஏனெனில் பண்பாட்டுக் குழுவின்


விதிகளை பகுதிப்பண்பாட்டுக்குழு ஏற்பது இல்லை. குறிப்பாக இரண்டு சாதிக்கு இடையிலான முரண்பாடுகளில் ஒரு குழுவின் கருத்தினை மற்றக்குழு ஏற்காமை காரணமாகவே குழு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.அத்துடன் Berg and Bernard (2004)ல் களவெடுத்தல் மற்றும் குழுக்களாக இணைந்து சட்ட விரோத நடவடிக்கைகள் செய்தல் என்பன விலகல நடத்தைகளாக உள்ளன என உறுதிப்படுத்தியுள்ளார். இக்கருத்துக்கள் பகுப்பாய்வினை உறுதிப்படுத்துவதாக அமைகின்றன. அத்துடன் 4% ஆனவர்கள் கஞ்சா, மாவா போன்ற போதைப் பொருட்களை பயன்படுத்தியுள்ளனர். Georges (2005) என்பவர் மேற்கொண்ட ஆய்வில் உடலியல் ரீதியான சண்டை, கஞ்சாபாவனை, மதுபாவனை என்பன விலகல் நடத்தையாக அறியப்பட்டுள்ளன. 12 வீதத்தினர் போதைவஸ்து பொருட்களை விற்பனை செயபவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் கஞ்சா விற்பனை, கசிப்பு விற்பனை என்பவற்றை மேற்கொள்பவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் 2 வீதமானவர்கள் போதைவஸ்து கடத்துதல் என்ற விலகல் நடத்தையை மேற்கொண்டுள்ளனர். ஆய்வுக்கு உட்படுத்தியோரில் 2% ஆனோர் கப்பங்கோரல் என்ற விலகல் நடத்தையை மேற்கொண்டுள்ளனர். நண்பர்களுடன் இணைந்து பொதுமக்களை அச்சுறுத்தி பணங்கோரியுள்ளனர்.16% ஆனோர் சண்டையிடுதல் என்ற விலகல் நடத்தையினை மேற்கொண்டுள்ளனர். இவர்களில் நண்பர்களுக்கு இடையிலான முரண்பாடு, மைத்துனர்களுக்கு இடையிலான முரண்பாடுஇ அயலவர்களுக்கு இடையிலான முரண்பாடு, வாள்வெட்டு சண்டை என்பன இடம்பெற்றுள்ளன.அத்துடன் Berg and Bernard (2004)ல் களவெடுத்தல் மற்றும் குழுக்களாக இணைந்து சட்ட விரோத நடவடிக்கைகள் செய்தல் என்பன விலகல் நடத்தைகளாக உள்ளன என உறுதிப்படுத்தியுள்ளார். இக்கருத்துக்கள் பகுப்பாய்வினை உறுதிப்படுத்துவதாக அமைகின்றன.

2% ஆனோர் சட்டவிரோததிருமணம் என்ற விலகல் நடத்தையினை மேற்கொண்டுள்ளனர். அனோமிக் கோட்பாட்டில் கட்டுப்பாடற்ற ஆசைகளையும், எதிர்பார்ப்புக்களையும் டுர்க்கைம் குறிப்பிடுகின்றார். [2] சமூகப்பிராணி என்ற வகையில் மனிதருக்கு விருப்பங்களும் இலக்குகளும் தேவைப்படுகின்றன. இதில் நிறைவேற்றப்படாத ஆசைகளை நிறைவேற்றுவதற்கு சமூகக்கட்டுப்பாடு காரணமாக அமைகின்றது. சமூகக் கட்டுப்பாட்டினைக் கூறி ஆசைகளை அடையும்போது மனவிரக்தி, மகிழ்ச்சி இன்மை ஏற்படும் என்ற கருத்தானது ஆய்விற்கு பொருத்தமானதாக அமைகின்றது. சட்டவிரோத திருமணம் மூலம் தாபரிப்பு பணம் செலுத்த முடியாதவர்களாக சிறையில் வாழ்கின்றனர்.

இக்கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் முன்னைய ஆய்வுகள் அமைகின்றன. றுயசைஅைர (2013) என்பவர் போதைப்பொருள் பாவனை, திருமணத்திற்கு முன்னரான பாலியல் தொடர்புகள், மதுபாவனை, குழுச்சண்டைகள், களவு, விபச்சாரம், திருட்டு ஆகிய விலகல் நடத்தைகளை இனங்கண்டுள்ளார். இக்கருத்துக்கள் இவ் ஆய்வின் முடிவுகளுடன் ஒததுச் செல்கின்ற வேளை அதிக விலகல் நடத்தையாக (92%) போதைப் பொருட்பாவனை இடம்பெற்றுள்ளமை என்பது வேறுபட்டு அமைகின்றது. கள ஆய்வில் களவு (36%) என்பதே அதிகளவு விலகல் நடத்தையாக இனங்காணப்பட்டுள்ளது.

**2. விலகல் நடத்தையாளர்களும் விலகல் நடத்தையை தூண்டிய காரணிகளும்**

**வரைபடம் 03**




(மூலம் : களஆய்வு)

வரைபடம் 03 இன் படி விலகல் நடத்தையாளர்களின் விலகல் நடத்தைக்கான காரணங்கள் பற்றி நோக்கும் போது, விலகல் நடத்தைக்கு சமூகமே காரணம் என்ற கருத்தில் சமூகத்தினர் ஏற்றுக் கொள்ளாமை, பிறரைப் போல வாழ வேண்டும் என்ற நோக்கம், சாதி ரீதியான சமூகப்பாரபட்சங்கள், தொடாச்சியான காவல்துறையினரின் அழுத்தங்கள் என்பவற்றின் காரணமாக விலகல் நடத்தைகள் இடம்பெற்றுள்ளன. விலகல் நடத்தையாள்கள் குறித்த நடத்தையில் ஈடுபடுவதற்கு காவல்துறையினால் தொடர்ச்சியான அழுத்தம் காரணம் எனக் கூறப்பட்டது. இக்கருத்தானது டுர்க்கைம் குறிப்பிடுகின்ற அனோமிக்

கோட்பாட்டின் கருத்தாகிய "ஒரு நபரின்மேல் அதிகரித்த கட்டுப்பாட்டை விதித்து, நெருக்கடியான ஒழுங்குமுறையின் அதிகரிப்பு அந்த குறிப்பிட்ட நபரினால் சகிக்க முடியாமையினால் அனோமி நிலை ஏற்படுகின்றது[2] என்ற கருத்தானது ஆய்விற்கு பொருத்தமானதாக அமைகின்றது.றொபேட் மேட்டனின் கருத்துக்களில் இலக்குகளை அடைவதற்கு பின்பற்றக் கூடியதாகவுள்ள வழிவகைகள் அல்லது முறைகளுக்கும் இலக்குகளை அடையும் வாய்ப்பு நிலைக்கும் இடையில் இடைவெளி காணப்படுதல் என்ற கருத்தானது இங்கு பொருத்தமானதாக அமைகின்றது. மற்றவர்களுக்கு இடையே சாதி ரீதியான பிரிப்புக்கள் உள்ளபோது தாழ்ந்த சாதிப்பிரிவில் உள்ள நோக்குகளுக்கு வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. வாய்ப்புக்கள் குறைவாக உள்ளோர் விரக்திக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாக கொலை, குழுசார்ந்த முரன்பட்ட நடத்தை என்பன இடம்பெறுகின்றன எனக் கூறமுடிகின்றது.

விலகல் நடத்தைக்கு குடும்ப சூழல் காரணம் என்ற கருத்தினை நோக்கும் போது, தனித் தலைமைக் குடும்பங்களில் வாழல், குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமை, பெற்றோர் பிள்ளைகள் மீது கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாமை, என்ற காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

விலகல் நடத்தைக்கு வறுமை காரணம் என்ற கருத்தினை நோக்கும் போது பொருளாதாரம் போதாமை, ஏனைய தொழில்களை மேற்கொள்ளல், தனிப்பட்ட விருப்பம்,தேவைகள் நிறைவேற்றப்படாமை என்பன காரணமாக விலகல் நடத்தைகள் இடம்பெற்றுள்ளன. "எனக்கு தொழில் மூலம் கிடைக்கின்ற வருமானம் போதாமை காரணமாக ஏனைய தொழில்களையும் செய்து வருகின்றேன் எனது குடும்ப வறுமை என்னை திசை மாற்றியது" (விடய ஆய்வு-01).

விடய ஆய்வில் பெறப்பட்ட தகவல்களும் இத் தரவுகளுக்கு இசைவான முடிவுகளைத் தருகின்றது.இங்கு தனியன் சமூகத்தில் உயர்ந்த இலக்கினை அடைய முயற்சி செய்கின்றனர். இதன்போது தனது அந்தஸ்து பற்றிய தெளிவான விளக்கம் இல்லாத காரணத்தினால் மாற்றுத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிலை காணப்படுகின்றது.

விலகல் நடத்தைக்கு நண்பர்கள் காரணம் என்ற கருத்தினை நோக்கும் போது, நண்பர்களுடன் குழுவாக செயற்படல், சமவயது அற்றவர்களுடனான தொடர்புகள், என்பன காரணமாக விலகல் நடத்தை இடம்பெற்றுள்ளது.

இவற்றை அனோமிக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கும்போது சுயநல எண்ணம் மற்றும் ஒருவரில் மற்றொருவர் தங்கி வாழ்தல் என்ற கருத்துக்கள் ஆய்வில் பொருத்தமானவையாக அமைகின்றன. தமது பாதுகாப்பு கருதி குழுக்களாக இணைதல் மற்றும் குழுக்களாக இயங்கி தமது தேவைகளைப் பூர்த்தி செய்தல் என முக்கிய விடயங்களாக காணப்படுகின்றன.

இக் கருத்தானது Reena மேற்கொண்ட ஆய்வுகளில் குடும்பப்பின்னனி, நன்பர்குழு, பாடசாலைச்சூழல், என்பன விலகலுக்கான காரணங்களாகவும்[4], Wairimu (2013) என்பவர் மேற்கொண்ட ஆய்வில் குழு ஆதிக்கம் என்ற கருதத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இக் கருத்துக்களானவை ஆய்வுடன் பொருத்தமானதாக அமைந்துள்ளன.

Carlson (2014) என்பவரது ஆய்வில் தனித் தலைமைக் குடும்பம், சமூகக்கட்டுப்பாடு அதிகரிப்பு, விலகல் நடத்தை கொண்ட சிறுவர்கள் நண்பர்களாக இருத்தல் என்ற காரணிகளும் விலகல் நடத்தைக்கு காரணமாக அமைந்துள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்துக்கள் இவ் ஆய்வுடன் பொருந்திச் செல்வனவாக உள்ளன.

விலகல் நடத்தைக்கு காரணம் சுயவிருப்பம் மற்றும் காதல் என்ற கருத்தினை நோக்கும் போது, தனிநபர் சார்ந்த ஆசை மற்றும் பாலியல் உந்துதல்கள் என்பன காரணமாக அமைந்துள்ளன. அனோமிக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கும்போதுநவீன சமூகம் மிகவும் சிக்கலானது ஒருவரது சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையில் இல்லை. ஒவ்வொரு தனியனும் தனது இலக்கினையே முதன்மையானதாகக் கொண்டுள்ளன. எனவே ஒருவர் மற்றவரின் இலக்கினை அடைய ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள். சுயநல எண்ணத்தினால் உந்தப்பட்டவர்கள் சமூக விழுமியம் , சமூக நிறுவனம் என்பவற்றை மதிக்காது விலகல் நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர்[2] இதனால் பாலியல் சார்ந்த விலகல் நடத்தைகள் ஏற்பட்டுள்ளன.

விலகல் நடத்தைக்கு போதைவஸ்து பாவனை காரணமாக அமைந்துள்ளது என்ற கருத்தினை

நோக்கும் போது, நண்பர்களுடன் இணைந்து ஒதுக்குப்புறமான இடங்களில் போதைப்பொருள் பிரயோகித்தல் மற்றும் தனிப்பட்ட விருப்பு என்பன காரணமாக இடம்பெற்றுள்ளன.

விலகல் நடத்தைக்கான காரணங்களை ஏலவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நோக்கும் போது, Jajathunka (2010) என்பவரது ஆய்வில் பாலியல் தொடர்பு, மதுபாவனை, வறுமை, குடும்பப்பின்னனி என்ற காரணிகளும் விலகல் நடத்தைக்கு காரணமாக அமைந்துள்ளளன எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்துக்கள் இவ் ஆய்வுடன் பொருந்திச் செல்வனவாக உள்ளன.

அனோமிக் கோட்பாட்டின் அடிப்படையில் விலகல் நடத்தைக்கான காரணங்களை நோக்குகின்ற போது இளைஞர்களின் இலக்குகள் மற்றும் அபிலாசைகளுக்கும் சமூக நிறுவன ரீதியான சாதனங்களுக்கும் இடையே ஏற்படுகின்ற முரண்பாடு, சமூகத்தில் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை. சமூகம் அங்கத்தவர்கள் மீது ஆரோக்கியமான செல்வாக்கினை பிரயோகிக்காமை, அதிகரித்த சமூகக்கட்டுப்பாடுகள், எதிர்மறையான சமூக அழுத்தங்கள், சுயநல எண்ணம், ஒவ்வொரு தனிநபரும் ஏதோ ஒரு அந்தஸ்து உடையவராகவும் அவற்றுடன் தொடர்புடைய பொறுப்புக்கள் உள்ளளவராகவும் உள்ள போது தமது அந்தஸ்து பொறுப்பு பற்றிய தெளிவான விளக்கம் இல்லாத நிலை ஆகிய காரணங்கள் மூலம் சாதாரண நிலைமைகளில் பின்பற்றுவதற்கு அஞ்சும் நடத்தைகளை விரக்தி பெற்ற நிலையில் பின்பற்றுகின்றனர். இவற்றின் காரணமாக இளைஞர்கள் மத்தியில் விலகல் நடத்தைகள் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவாகின்றது.எனவே இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தைக்கும் நியமமறுநிலைக்கும் இடையே தொடர்பு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

அனோமிக் கோட்பாட்டின் படி நியாயபூர்வமான காலப் பகுதிக்குள் தேவைகள் நிறைவேற்றப்பட்டால் நியமமறுநிலை எழுவதைத் தவிர்கலாம் என டுர்க்கைம் கருதுகின்றார். எனவே விலகல் நடத்தை உருவாவதை தவிர்க்க வேண்டும் என்றால் சமூக அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சமூகம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலான பரிந்துரைகள் அனோமிக் கோட்பாட்டுடன் பொருத்தமானதாக அமைகின்றது.

கல்வியினை வழங்குதல், பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தல், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதலும், வேலையில்லாப் பிரச்சனைகளை தீர்த்தலும், இளைஞர் கழகங்களினை ஆரம்பித்தல், உள, ஆன்மீக ஆற்றுப்படுத்துதல் வழங்கல், சமூகத்தில் உள்ள மக்களின் மனநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்தல், குடும்பமட்டத்தில் இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல், சமூகத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் மூலம் இளைஞர்களுக்கு ஏற்படும் தனியாள், குடும்ப, சமூக மட்டத்திலான தடைகளை குறைக்க முடியும்.

விலகல் நடத்தைக்கான பரிந்துரைகள் அனோமிக் கோட்பாட்டின்படி நோக்கும்போது தனிநபர்கள் தங்களது நடத்தைகள் பற்றி உணர்ந்தவர்களாக சமூகநலனுக்கு முன்னுரிமை வழங்கும் தன்மை காணப்படுகின்றது என்ற இக்கருத்தானது ஆய்விற்கு பொருத்தமானதாக அமைகின்றது. இதன் மூலம் விலகல் நடத்தைகள் குறைக்கப்படுவதுடன் இளைஞர்களை சமூகத்தில் செயற்றிறன் மிக்கவர்களாகவும் மாற்றி அமைக்க முடியும்.

**முடிவுரை**

இவ் ஆய்வானது இளைஞர்களின் விலகல் நடத்தைக்கானகாரணங்களை இனங்காண்பதற்கும் அக்காரணிகளை வெற்றிகொள்வதற்கான வழிவகையைக் கண்டறியவும் சாத்தியமாக அமைகின்றது. அத்துடன் இவ் ஆய்வின் முடிவுகள் எதிர்கால சமூகத்தில் விலகல் நடத்தையைக் குறைப்பதற்கான வழிவகையை ஏற்படுதத உதவும் எனக் கருதுகின்றேன். இளையோரது எதிர்பார்ப்புக்கள், பங்கேற்றல் என்பவற்றை இன்றையசமூகச் சூழலுக்கு உறுதிப்படுத்த அவசியமானதாக அமைந்துள்ளது.

இவ் ஆய்வானது எதிர்காலத்தில் ஏனைய சிறைச்சாலைகளிலுள்ள விலகல் நடத்தையாளர்கள் மத்தியில் ஆய்வினை மேற்கொள்வதற்கான அடிப்படையை வழங்குவதுடன் விலகல் நடத்தைக்கான ஏனைய காரணிகளைக் கண்டறிகின்ற ஆய்வுகளை வடிவமைப்பதற்கான அடிப்படையினையும் வலியுறுத்துகின்றது.

**உசாத்துணைகள்**

1. Mayar,M, Violent youth conflicts in Sri Lanka comparative results from Jaffna and kampantota. S.T.Hettige (ed.)in Sri Lanka youth challenges and responses, Friedrich ebert stiftung Sri Lanka.pp 208-224,2002
2. றிச்சேட்.அ. எ,(2006), சமூகப் பொருண்மைகள் - கோட்பாடும் பிரயோகங்களும் பாகம் 1 சமூகவியல் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
3. இராஜேஸ்கண்ணன்.,(2013), கிராமியம் கல்வி மேம்பாடு, சமூகவியல் பார்வைகள், சாத்வீக சுருதி இமையாணன், உடுப்பிட்டி.
4. Reena Rebellow, "Factors influencing deviant behaviour among adolescents",Indian Journal of Applied Research, vol:05, No:10,2015
5. BCV.Senaratna,BVN.Wijewardana, "Risk behavior of street children" ,Ceylon medical journal,Vol;57 No;3,pp100-111,2012